

SAKTHI FOUNDATION - Uni5 RAMAYANAM - 2. இஷ்வாகு குல தனம் - ஸ்ரீரங்கம்

திருச்சி ஸ்ரீரங்கத்துக்குக் கடன் வாங்கிக் கொண்டு சென்றிருக்கிறோம். குறிப்பாக B.Sc படிக்கும் சமயத்தில் பால்ய ஸ்நேகிதன் கணேஷ்ராமின் உறவின் முறை ஒருவர் வீட்டில் ஒருநாள் தங்கி ஸ்ரீரங்கநாதரை தரிசனம் செய்தேன். [1991 டிசம்பர்]

அன்று மூலவருக்கு முத்தங்கி சார்த்தி இருந்தனர்.ஒன்றும் புரியவில்லை.இருட்டில் ஏதோ தெரிந்தது. கர்ப்ப க்ருஹத்துக்கு வெளியில் உத்சவர் ஸ்ரீஅழகிய மணவாளன் நம்பெருமாள் திவ்யமாய் இருக்கக் கண்டேன்.

அன்று இரவு முழுக்க தூக்கமே இல்லை.மறுநாள் ஒரு தரிசனம் கிடைக்குமா? ஏதாவது தெளிவாகக் காண முடியுமா? மீண்டும் எப்போது பெற்றோர் ஸ்ரீரங்கம் ஈரோட்டில் இருந்து தனியே அனுப்புவது?

அன்று உறவினர் வீட்டில் உண்ட கதம்ப சாம்பார் சாதம் இன்றும் நாவில் உள்ளது. ராஜ கோபுரத்துக்கு மிக அருகில் வீடு.

"அண்ணா! தினமும் பெருமாளை தரிசினம் செய்வது உண்டா?" - நான்

"ஹா ஹா ஹா, என் அப்பா கோயில் பக்கம் போயே இரண்டு வருஷங்கள் ஆயிற்று!" - பத்மா மூத்த பெண்ணின் பதில் தான் இது.

என்னால் அதை ஏனோ ஏற்றுக் கொள்ள முடியவில்லை.வாழ்வை வீணடிக்கிறாரோ?

மறுநாள் கணேஷும் நானும் மீண்டும் ஒரு trial பார்த்தோம்.கர்ப்ப க்ருஹத்தின் உள்ளே ஏதோ புரியாத புதிராய் ஆதிசேஷன் படுக்கையின் மீது பெருமாள் கிடந்தார்.

கண்ணைக் கட்டிக் காட்டில் விட்ட கதியாய் அன்று கோயிலின் பல பகுதிகளை வாயைப் பிளந்து கொண்டு பார்த்து விட்டு, ஒரு காலத்தில் அம்மாவின் தாய்மாமா [தாத்தா கதிர்வேலு] சொல்லும் திருப்பல்லாண்டின் முதல் இரண்டு பாடல்கள் மட்டும் மனப்பாடப்பகுதியாய் மனதின் உள்ளே ஒரேடியாக ஓட பல முறை மீண்டும் மீண்டும் ராஜகோபுரத்தைப் பார்த்துக் கொண்டே நாமக்கல் வழியே ஈரோடு பஸ் ஏறி வீடு வந்தோம்.

ஸ்ரீரங்க ராஜகோபுரம் மிக மிக ஆழமாக என் மனதில் பல உணர்வு அலைகளை ஏற்படுத்தியது.அதை எழுப்பிய ஜீயரை வணங்குகிறோம்!

ஸ்ரீரங்கம் கோபுரம் முடிவு பெற்றால் லங்கை அழியுமாம்.இது ப்ரபலமான பேச்சு.உண்மை அன்று சீதையின் மூலம் லங்கையில் தொடங்கிய போர் இன்றும் ஓயவில்லை. ஒரு காலத்தில் சுவர்க்கபுரியாக விளங்கிய அழகிய லங்கை இன்று பிணக்காடு ஆனதே!

ஸ்ரீரங்கன் லங்கையை நோக்கி அல்லவா கிடக்கிறார்? அவர் என்ன செய்கிறார்.தமிழனின் மண் ஆசையை வேருடன் அறுக்கிறார். தெற்கு திசை நம் ஆணவத்தைப் பிடுங்கும் திசை.அதனால் தான் தெற்குப் பார்த்த வீட்டில் விரயம் அதிகம்.லங்கையில் மண் ஆசை விரயம் ஆகிறதோ?

கோபுரத்தின் கும்பாபிஷேகத்தைப் பார்க்க என் அம்மாவின் அம்மா மிக மிக ஆசைப் பட்டார்.அதற்கு தாத்தா முசிறியில் தான் பெரிய உத்யோகத்தில் சமீபத்தில் இருந்தார்.அவர் ஏனோ கூட்டி வரவில்லை.கோபுர தரிசனத்துக்கு ஆசை வைத்த பாட்டியும் வைகுண்ட வழிதேடிக் கொண்டே போயும் விட்டார்!

இசைஞானி இளையராஜாவின் நன்கொடையால் கோபுரத்தின் ஒரு அடுக்கு இருப்பதை அறிகிறேன்.அவரது இசை மேலும் உயர்க!

ஸ்ரீரங்கத்து வாலி எழுத, மஹாநதி ஷோபனாவும், உமா ரமணனும், பாலுவும் பாட ஸ்ரீரங்கத்தைப் பின்னர் இளையராஜா வீடியோ விஷ்வல் இசையாக்கி விட்டார்.

ஸ்ரீரங்கத்துத் தேவதைகள் புத்தகம் எனது மற்றொரு பொக்கிஷம்.அதைப் படித்து அதன் மூலம் சுஜாதா உணர்த்திய பல ஆன்மீக உணர்வுகள் என்னுள் உலாவுகின்றன.இன்றும் அவரது பாத்திரங்களையும் கதையில் வரும் இடங்களையும் ஸ்ரீரங்கத்தில் அடையாளம் காண மனம் ஏங்குகிறது.

காவிரிப் பாலம் தாண்டிப் பல தூரம் கோபுரத்தைப் பார்த்துக் கொண்டே வந்தேன்.

கடையில் வாங்கிய உற்சவர் போட்டோ என் பொக்கிஷமானது.

நல்ல விவரம் தெரிந்த வயதில் சென்ற ஸ்ரீரங்கப் பயணம் இது தான்.

மிகச் சிறிய வயதில் திருப்பூரில் பாட்டி வீட்டில் உள்ள ஸ்ரீரங்கநாதரின் கொலு பொம்மையைக் கடலில் வைப்பதாக அடம்பிடித்து டப் தண்ணீரில் போட்டிக் கரைத்துப் பொருமாளுக்கே மோக்ஷம் கொடுத்த ஞாபகம் மனதில் வருகிறது.

திருச்சிக்குப் பெரியப்பா வீட்டுக்கு வரும் போதெல்லாம் மிகச் சிறிய வயதில் ஸ்ரீரங்கநாதரின் களிமண் உருவத்தை வாங்காமல் ஊர் சென்றதே இல்லை.

கணேஷ்ராம் மூலம் ஆரம்பித்த ஸ்ரீரங்கப் பயணம் இன்று மிகவும் செம்மையாக இருக்கிறது.இந்த கணேஷ் அந்த ராமனிடம் செல்வதற்கான பயணத்தை ஆரம்பித்து வைத்தான்!

”ஒரு ஊரில் உடலால் வாழ்ந்து என்ன பயன்? மனதால் சதா அவ்வூரின் தேவதையுடன் தொடர்ப்பு கொள்ள வேண்டும்! அம்மனதே ஸ்ரீரங்கம், மதுரை, சிதம்பரம் எல்லாம்!” என்ற அறிவு வர இத்தனை ஆண்டுகள்.பாரதியார் என் குரு,அவர் கூறிய தத்துவம் தான்!

அதன் பின் என் அக்காளும் தமிழ் ஆசிரியருமான முனைவர். கலைச்செல்வி மூலம் ஸ்ரீரங்கத்தின் உறவு 1993 மே மாதம் முதல் வலுவானது.

அக்காளின் குடும்பம் எனக்கு ஸ்ரீரங்க தரிசனத்துக்கு இடம் கொடுத்ததை மனமார வாழ்த்துகிறேன்.அக்காளின் வீடு புலிவட் தெருவில் மிகப் பழமையான வீடும்.அவர் வீட்டின் மாடியில் இரவில் ஸ்ரீரங்க கோபுரத்தின் விளக்குகள் தெரியும்.பல முறை

இரவில் வெகு நேரம் கோபுர தரிசனம் செய்த ஞாபகம் உண்டு.

1993ல் காலில் அறுவை சிகிச்சை ஆகி மருத்துவமனையில் இருந்த போது ஸ்ரீரங்கனின் அழகிய ப்ளாஸ்டிக் சிலை தான் என் உயிர்த்துணைக அவன் அருளால் நடந்தேன், வாழ்க்கையின் மிக முக்கிய வினைகளைக் கடக்கத் தொடங்கினேன்.

1993 மே விடுமுறையில் அக்காள் வீட்டில் தங்கி உந்திக் கொண்டே நடந்து வசந்தோத்சவம் கண்ட ஞாபகம் வசந்த காலக் கோலங்கள்! அன்று கால் வீங்கிக் கொள்ள அக்காளின் அம்மா அன்புடன் தடவிய தைலக்காப்பு அவர் என்னுள் இருக்கும் ரங்கனுக்குச் செய்த அன்பு!

அவரது ஆழ்ந்த அன்பின் மூலம் முனைவர்.ஈஸ்வரன் கீழ் நேஷனல் கல்லூரில் முனைவர் பட்ட ஆய்வு மூன்று ஆண்டுகள் செய்ய முடிந்தது."ஆழ்வார்களின் பாசுரங்களுக்குப் பெரியவாச்சான் பிள்ளையின் வியாக்யானம் - ஓர் ஆய்வு" என்று இறைவனின் பணியை மேற்கொள்ளும் பாக்கியம் கிடைத்தது.ஸ்ரீரங்கத்தை நேரடியாகத் தொடர்பு படுத்தும் கடைசி ஆய்வுச் சேர்க்கையைத் தனி chapterஆக வைக்கச் சொன்னார் முனைவர்.ஸ்ரீசேஷாத்ரி [அப்போதைய கல்லூரி முதல்வர்] அப்பகுதி தான் பொதுமக்களுக்குப் பல கேள்விகளை வைவாவில் கேட்கத் தூண்டியது!

மக்கள் முன்னிலையில் நேர்முகத் தேர்வுக்கு உரிய பல கேள்விகளுக்கு ஸ்ரீரங்கத்தில் கோயில் மண்டபத்தில் இருந்து கொண்டு தான் பதில்கள் தாயாரித்தேன்.[2003]

1993 ஆகஸ்ட் பதினான்காம் பதினைந்தாம் நாட்களில் நானும் ப்ரதீப்பும் ஸ்ரீரங்கத்தைக் குத்தகைக்கு எடுத்துக் கொண்டோம் எனலாம்.எங்கள் வாழ்வில் முதன்முதலாக இருவரும் சேர்ந்து ஸ்ரீரங்கம் வருகிறோம்.

ஸ்ரீரங்கத்தில் செய்த ப்ரம்மாண்ட அங்கப்ரதக்ஷிணமும் தங்கல்களும் ஏகாதசித் திருமஞ்சனமும் ஸ்ரீரங்கனை இன்னும் அருகில் கொண்டு வந்தன.

பின்னர் 1997வரை எத்தனை முறை இருவரும் கடன் வாங்கிக் கொண்டு ஸ்ரீரங்கம் சேவித்தோம்?!

எத்தனை பேருக்கு மதுரைப் பல்கலைக் கழகத்தில் ஸ்ரீரங்க மாஹாத்மியம் கூறி

அழைத்து வந்தோம்?!

ஸ்ரீரங்கம் கோயில் உத்சவ நாள்காட்டி வைத்துக் கொண்டு ஆஹா எத்தனை உத்சவங்கள் சேவித்தோம்?!

தாயாரின் மஞ்சள் காப்பு எங்கள் ஹாஸ்டல் அறைக்குள் சதா மணக்கும்.

ஸ்ரீரங்கம் ஜூஸ் கடையில் எத்தனை லிட்டர் சாத்துக்குடி ஜூஸ் குடித்தோம், எத்தனை முறை ந்யு பாலாஜி பவனில் உணவு உண்டோம்?

கரு வளர்வது போல் ஸ்ரீரங்கன் எங்களுள் வளர்ந்தான்.அவனை முன்னிட்டுக் கொண்டு வாழ்க்கை இன்று வரை பயணிக்கிறது.

பங்குனி உத்திரம் முதன்முதலில் சேவிக்க புது வேட்டி கட்டிக் கொண்டு சென்றோம்.

எங்கள் அறையில் நம்பெருமாளின் ஞானபூமி அழுக்குப் புகைப்படம் ஒன்று ரத்னாங்கிக் கோலத்தில் லேமினேட் செய்து வீற்றிருக்கும்.

தாயார் நவராத்ரி, குறிப்பாகத் திருவடி சேவை, ஏகாதசி, உத்திரம், ஸ்ரீஜெயந்தி என ஸ்ரீரங்கனின் சேவைகள் கண்டு பரிணாமம் அடையப் பெற்றோம்.

அழகர் கோயில் கும்பாபிஷேகத்தில் மயங்கி விழுந்த ஓர் மூதாட்டியைக் காப்பாற்ற, அவர் ஸ்ரீரங்கம் என்று அறிய வந்து அவர் வீட்டுக்குச் சென்று உணவு உண்டு ரங்கனை சேவித்த நாளும் உண்டு.

ஓவியப் பயிற்சியில் அடியேன் அதிகம் வரைந்தது நம்பெருமாளும் தாயாரும் தான்!

உத்சவரின் பல்வேறு புகைப்படங்களும் எனக்குத் துணை புரிந்தன.

இடையில் முனைவர்ப் பட்ட ஆய்வுக்கு ஒரு வழிகாட்டியை அறிமுகம் ஆகி, ரங்கனின் அருளால் அவரது பொருள் ஆசையை அறிந்து அதை விட்டேன்.

ஸ்ரீரங்கத்திலேயே வேலை தேடிக் கொண்டு ஆய்வு செய்ய ஒரு பள்ளி நிர்வாஹி என்னை அழைத்தும் என் வினை என்னை விடவில்லை.அதற்கு வேறு

காரணங்கள் பல இருந்தன என்பதை ரங்கன் பின்னாளில் உணர்த்தினான்.

ஸ்ரீரங்கம் இன்று சொந்த ஊராகி விட்டது.நாம் எல்லோரும் அதில் இருந்து தானே வந்தவர்கள்? அது என்றால்? மூலப்பொருள்!

ஆதி மூலமாய் மெய்யுணர்வின் குறியீடாய் தனி சத்யமாய் ஆதிசேஷன் மீது தனித்து யோக உறக்கம் கொள்ளும் மூல சத்யமே கர்ப்ப க்ருஹத்தில் இருக்கிறது.சுதை மூர்த்திக பல ஆயிரம் சாளக்ராமங்களால் நிரம்பிய மூர்த்தம்.விக்ரஹ ஆராதனையின் மூலப் பிறப்பிடம்!

பெரிய பெருமாள்!

பெருமாள் - மிக உயர்ந்தவர் - அவரே ஸ்ரீராமன்

அவரது குல தெய்வம் இவர்.ஆம் இஷ்வாகு குல மூர்த்தி!

"அயோத்யா பெருமாள் இவர் தான்.அயோத்யாவில் அவ்வூர்ப் பெருமாள் இல்லை" - என்பார் ஸ்ரீமான் மஹேஷ் அண்ணா.

இவ்வளவு பெரிய விக்ரஹத்தை அயோத்யாவில் இருந்து கொண்டு வர முடியுமா? விழிப்புணர்வு மிகவும் குறைந்த இக்காலத்திலேயே பற்பல அதிபயங்கர-பெரிய பொருட்களை tankers - trucks மூலம் கண்டம் விட்டு கண்டம் எடுத்துச் செல்லும் போது ஏன் பெரியபெருமாளை விபீஷணன் கொண்டு வந்தத்தில் நம்பிக்கை இல்லை? பாழும் மனம்!

தன் தேசத்தில் சென்று ப்ரதிஷ்டை செய்தால் பாரத தேசத்து ஜனங்கள் செல்ல முடியாது [இக்கால லங்கை வாழ்க்கை விபீஷணனுக்கும் புரியும்?] என்றே சோழ தேசத்தில் ப்ரதிஷ்டை செய்தானோ?

பிற்காலத்தில் காவிரியின் பெருக்கால் ரங்க விமானம் மண் மூடிப் போனதாகவும், ஒரு கிளி அந்த ரஹசியத்தைக் கூறக் கேட்டு ஒரு சோழன் அகழ்வாராய்ந்து மீண்டும் பெரிய பெருமாளை வெளிப்படுத்தியதாகவும் ஸ்தல வரலாறு கூறும்.

இதன் உட்கருத்தைப் புரிந்து கொள்ள வேண்டும்.
கிளி - இது சத்யத்தின் குறியீடு.
கிளி சொல்லிக் கொடுத்ததை மட்டும் தான் சொல்லும்.ப்ரபஞ்ச ரஹசியம் ஒன்றே

ஒன்று தான்! அது அனைத்தும் ப்ரஹ்ம மயம் என்பதே ஆகும்.
ப்ரஹ்மத்தை உணர முடியாமல் மனோ தத்துவமான காவிரி [தண்ணீர்] பெருகி உடல் தத்துவத்துக்கு மக்கள் அதிகம் இக்காலத்தில் முக்கியம் தர ப்ரஹ்மம் மண் [உடல்] மூடக் கிடக்கிறது. அதை அறிந்த சோழன் தன் குருவின் துணையால் வெளிக்கொண்டு வருகிறான்.ஆன்மீகப் பயிற்சி மூலம் மனிதனுள் இருக்கும் ப்ரஹ்மத்தை அவன் உணர முடியும்.அதற்கு ஆச்சாரியன் தேவை!அதனால் தான் ஸ்ரீரங்கத்தில் பெருமாள் கிளி மண்டபத்தில் அடிக்கடி அமர்வார்.கிளி மாலையும் சார்த்திக் கொள்வார்.

இன்று ஸ்ரீரங்கம் மஹேஷ் அண்ணா - பாலா அக்காவின் வாசஸ் ஸ்தலம். வாழ்க்கையில் எதுவுமே வேண்டாம், அண்ணா [க்ருஷ்ணப்ரேமி மஹராஜ்] நிழல் போதும் ரங்கன் போதும் என்று கோவையை விட்டு வந்து விட்டவர்கள். அக்கா என் தமிழ் ஆசிரியர் PSG - ஸ்ரீ.மருதநாயகம் அவர்தம் புதல்வி.

ஆன்மீக வாழ்வில் எத்தனையோ வழிகாட்டிகள் எமக்கு.அதில் இவர்கள் மிகவும் முக்கிய நபர்கள்.இன்று பாலா அக்கா ஸ்ரீரங்கத்தில் இருக்கிறார்.எதற்கும் எவ்வித வழிபாடும் செய்து foundationன் வாழ்க்கைக்கு உதவியாய் spoken English கைங்கர்யம் செய்கிறார்.

எப்படியோ ரங்கன் உடல் ரீதியாகவும் தன் ஸ்தலத்துடன் பிணைத்துக் கொண்டு எங்கள் ஏக்கத்தைப் பூர்த்தி செய்தான்.

இன்று அக்கா வீட்டுக்குப் போவேன், ரங்கனைப் பார்க்காமல் வருவேன்,காரணம் ரங்கனைக் கண்ட ஆனந்தம் இவர்களுடன் சத்சங்கம் செய்தாலே கிடைக்கும்! திருமலையின் மலையப்ப சாமியின் நித்ய வாசம் இவர்தம் பூஜா க்ருஹம்!

இஷ்வாகு குலம் ஸ்ரீராமன் குலம். சூரிய வம்சம். சூரியன் தூய விழிப்புணர்வின் குறியீடு

காலம் காலமாக ஸ்ரீநம்பெருமாள் இருக்கிறார்.அடிக்கடி கேட்பதுண்டு, ***"ஹே பெருமாளே! ஒரு நொடி அந்த ராமனும் சீதையும் எப்படி இருந்தார்கள் என்று காட்டேன்.உன் திவ்ய பாதங்கள் மூலம் புகைப்படம் எடுத்துக் கொண்டு வைத்திருக்க மறந்தாயோ?"***

***"அடே! நானே ராமன், ராமனே நான்!"*** - சிரிப்பார் ரங்கன்.

நம்பெருமாளில் பஞ்சகச்சமும் பலவிதமாக அவர் அணியும் வடதேசத்து வகை ஆடைகளும் பெயர்களும் உணவுகளும் இன்னும் அவர் அயோத்யாவை மறக்கவில்லை என்பதை உணர்த்துகிறது.

***"ஸ்ரீராமனின் நீண்ட கைகள் போல மூலவரின் கைகள் நீண்டு முழங்காலுக்கு வரை உள்ளதைப் பார்த்தாயோ?"*** - என்பார் பாலா அக்கா.

தாயாரின் டபர் சார்த்து எனப்படும் அடுக்குப்பாவாடை மாதிரி தான் சீதை உடை அணிவாளாம்.

அவளது ராஜமஹிஷி மாங்கல்யம் தானே இன்னும் தாயாரின் கழுத்தில் பாரத தேசத்தின் பெண்களின் உன்னதப் பண்பாட்டை உணர்த்திக் கொண்டு தொங்குகிறது?

லங்கையில் ராவணனின் கோட்டையைத் தகர்த்த பின் நினைவாக எடுத்து வந்த நீல நாயகக் கற்கள் இன்று நம்பெருமாளின் அழகிய நிமிர்ந்த தீரமான மார்பின் வீற்று இருந்து ராமாயணத்தைப் பேசுகிறது!

கோயிலின் பல ஆபரணங்கள் சீதையும் ராமனும் அணிந்தவையாம்.

ஸ்ரீராமனின் தோள்களிலும் பரந்த மார்பிலும் சந்தனமும் குங்குமக் குழம்பும் பூசப்பெற்று கமழ்வதை வால்மீகி கூறுகிறார்.அதை அப்படியே நம்பெருமாளிடம் பார்க்க முடியும்.

மனோச்சிலை என்ற மூலிகையைக் கசக்கி எடுத்துக் கன்னத்தில் சீதைக்கு திருஷ்டிப் பொட்டு வைப்பார் ராமன்.வன வாச காலத்திலும் அதைச் செய்து மனைவியை அழகு பார்த்தார்.இன்று தாயாருக்கு அப்பொட்டு இடுவது வழக்கம்.

மஹாலக்ஷ்மியான தாயார் "பெண்மைக்குக் கணவனே தெய்வம்! [ஜீவனாகிய நாயகிக்கு, பரம்பொருளான இறைவனே எல்லாமும்] என்று உணர்த்தத்தான் திருமாங்கல்யத்தைத் தவிர, அழகிய மணவாளன் பதக்கம் தவிர அவள் எதையும் அணிவதில்லை.

ஸ்ரீராமனின் மிக உயர்ந்த குணம், தன்னை அண்டியவர்களுக்கு அடைக்கலம் தருதல்.அதையே தன் வாழ்வின் ஜென்மத்தின் ப்ரதான வ்ரதம் என்கிறார்.விபீஷணனை லக்ஷ்மணன் ஏற்றுக் கொள்ள மறுக்கையில்,

அவனுக்குக்காக சீதையையும் லக்ஷ்மணனையும் இழக்கத் தான் கவலைப் படுவதில்லை என்று தன் கொள்கையை உணர்த்துகிறார்.

நம்பெருமாளுக்கு ”அபயப்ரதன்” என்ற பெயர் உண்டு.”அன்பருக்கு பயத்தை நீக்கும் மிக முக்கிய பணி செய்பவன்” என்று பொருள். அதனால் தான் அவரது வலது கை அபயம் காட்டி மலர்ந்த தாமரை போல் அழகாக இருக்கும்.

நம்பெருமாள் தன் சக்ரத்தை உபயோகிக்கும் பாவத்தில் சுழற்றிய படி இருக்கிறார்.இதை ”ப்ரயோகச் சக்ர கோலம்” என்பர். அன்பர்களின் மனதில் உள்ள அறியாமையை விலக்கும் ஞானப்பேரொளியைச் சக்கரம் தருவதாக ஐதீஹம்.

பெருமாள் எழுந்தருளும் போது அயோத்யாவில் மன்னர்களுக்கு வரவு சொல்லப்படும் முறையையே இன்றும் ஸ்ரீரங்கத்தில் பின்பற்றுகிறார்கள்.சிங்கம்-யானை-எருது-பாம்பு போல் அவரது நடையழகு காட்டப்படுகிறது.

ஸ்ரீராமனின் கம்பீர நடையழகு இவற்றையே ஒத்து இருப்பதாக வால்மீகி கூறுவார்.

அவரது தலையணைகள், அழகிய ஆடைகள், அவற்றின் வண்ணங்கள், திண்டுகள் இவை எல்லாம் குறிப்பாக வடதேசத்தின் கலாச்சாரத்தை ஒட்டியே அமைவதைக் காணலாம்.

உடல் தேய்ந்து, முகம் தேய்ந்து வெறும் கஸ்தூரித் திலகமும் புன்சிரிக்கும் முகமும் அவரது அடையாளங்கள்.

உத்சவரை ஸ்ரீராமன் என்றும் மூலவரை க்ருஷ்ணன் என்றும் பாவிப்பது வழக்கம்.

நாபிக் கமலத்தில் ப்ரம்மா கூட மூலவருக்கு இல்லை.ப்ரஹ்மம் தனி சத்யமாய் மூலமாய் இருப்பதை இத்திருமேனி காட்டுகிறது.

உத்சவத்தில் ராவண வதத்தை இவர் குறியீடாகக் காட்டுவார்.அதே போல் வராக, நரசிம்ஹ, வாமன அவதாரங்களையும் குறியீடுகளாய்க் காட்டுவார்.

ராதைக்குக் கண்ணன் மதுராவில் குவலாய பீட யானைக் கொன்று அதன் தந்தத்தில் சுற்றி இருந்த முத்துக்களைக் கொண்டு சூட்டிய முத்து மாலை இன்று தாயாரின் மார்பில் சேர்த்திக் காலத்தில் விளங்குவதாக ஐதீஹம்.

ஸ்ரீரங்கம் நம்பெருமாளைப் பற்றி எழுத ஆயிரம் வால்மீகிகளும் கம்பர்களும் தேவை.அடியேன் அணுவளவு அனுபவத்தைப் பகிர்ந்து கொண்டேன்.

ஆழ்வார்கள் பதினொரு பேரும் [247 பாசுரங்கள் - தமிழ் எழுத்துக்களின் எண்ணிகை] ஆச்சாரியர்களும் எண்ணற்ற அன்பர்களும் போற்றும் இஷ்வாகு குலதனமான அழகிய மணவாள நம்பெருமாளைக் காப்பாற்ற அன்பர்கள் காலம் காலமாக எடுத்துக் கொண்ட ஸ்ரத்தையான ஆபத்தான சேவைகள் அவர்களுக்கு மோட்சத்தை அவசியம் வழங்கி இருக்கும்.

இவரைக் காக்க முயற்சி செய்தது போல் வேறு எந்த தெய்வத் திருமேனியைக் காக்க தேசத்தில் முயற்சிகள் இருக்க வாய்ப்பே இல்லை.காரணம் ஸ்ரீராமனும் தேவியும் வழிபட்ட மூர்த்தி இவர் அன்றோ?

அயோத்யாவில் ராஜ வம்சத்து மாளிகைகள் எப்படி இருந்தனவோ அதையே ஸ்ரீரங்கம் ப்ரதிபலிக்கிறது.இன்று அயோத்யாவில் காலத்தின் போக்கில் பல மாற்றங்கள் வந்தன.ஸ்ரீரங்கம் மாறவில்லை.

ராமனுக்கும் சீதைக்கும் தனித்தனி மாளிகைகள் போல் தான் இரு பெரும் சன்னிதிகள் உள்ளன.இடையில் அவர்கள் மாளிகையில் இருந்த அழகிய குளம் போல் சந்த்ர குளம் இன்றும் உள்ளது.

அயோத்யாவின் replica ஸ்ரீரங்கம் என்றே கூறலாம்.காரணம் ஸ்ரீமத் ராமானுஜர்.அயோத்யாவில் வாழ்ந்த லக்ஷ்மணனின் மறு பிறப்பு அல்லவா? அதான் தன் பூர்வ ஸ்தலத்தையும் தன் குல மூர்த்தியையும் பார்த்துப் பார்த்து சேவைகள் செய்து 120 வருடங்கள் ஆசை தீர வாழ்ந்தார்.அல்ப ஆயுளில் தேசத்துக்காக அண்ணன் சொல் கேட்டு அன்றோ ராமாயணத்தில் சரயுவில் மூழ்கினார்? அத்யாகம் தந்த வரமே ராமானுஜ பிறப்பு.

தன்னால் உடலை உயிர் த்யாகம் செய்த ஒரே காரணத்தால் மனம் கலங்கிய அண்ணன் இன்று ஆயிரம் வருடங்களாக ராமானுஜரின் திருமேனியைப் பாடம் செய்து தன் பக்கத்திலேயே ஸ்ரீரங்கத்தில் வைத்துக் கொண்டு தன் சஹோதர பாசத்தை வெளிப்படுத்துகிறார்.

கோயில் ஒழுகு - வரலாற்று நூல்கள் மூலம் அறியப்படும் செய்திகள் பற்பல.

வடதேசத்து அன்பர்கள் தங்கள் ஊர் தெய்வம் என்ற உரிமை கொண்டாடி அன்புடன் வணங்குவதைக் காண அழகாக இருக்கிறது!

அயோத்திய அரச வம்சத்தின் வரலாற்றைப் புகழ்ந்து பாடி அதற்கு ஏற்ப அபிநயம் பிடித்தாடும் கலைஞர்கள் பற்றி வால்மீகி கூறுகிறார்.அவர்களின் மறு வடிவே இன்று ஸ்ரீரங்கத்து அரையர்கள்.தமிழ்ப் பாசுரங்களைப் பாடி, அதற்கு ஏற்ப அவர்கள் ஆடும் அழகு தனி!

ஆனால் இன்று சாதியின் அடிப்படையில் ஸ்ரீரங்கம் இயங்குகிறது.இன்று இருக்கும் ஸ்ரீரங்கம் நமக்கு மனக்கசப்பையே உண்டாக்கும்.பரவாயில்லை! அவ்வூரில் வாழும் ரங்கன் என்றும் எப்போதும் எவர் பொருட்டும் மாறான்!

அவனது பழைய flash back காலப்பகுதிக்கு நாம் வால்மீகி மூலம் பயணம் மேற்கொள்ள இருக்கிறோம்.

ராமாயணத்தின் மூல காரணம் ஸ்ரீராமன்.அவனுக்கே மூல காரணம் ரங்கன்.

***ப்ரம்மா இல்லாத ரங்கனாக மூலஸ்தானத்தில் படுத்துக் கொண்டு இருக்கிறான்.ஆனால் ப்ரபஞ்சத்தின் ஒவ்வொரு அணுவும் உயிரும் அவனுடன் தொப்புள்கொடி உறவு கொண்டவை என்பதை யாரும் மறுக்க முடியாது!***

கூட்டத்திலும் காசுபண கஷ்டத்திலும் சாதி வேற்றுமை பாராட்டிலும் ஸ்ரீரங்கம் போக வேண்டும் என்பதே இல்லை.ஆழ்வார்களின் பாசுரங்களை வாய்விட்டுப் பாடுக, அவன் திரு வடிவை மனதில் எண்ணுக, அவன் நம் மனம் என்ற கர்ப்ப க்ருஹத்தில் இருப்பதை உணர்வீர்கள்.

உடல் ரீதியாக ஸ்ரீராமனும் சீதையும் இன்று இல்லை.ஆனால் ஆத்ம தத்வமாக அவர்களின் மூலகாரணம் இன்றும் நாம் காண ஸ்ரீரங்கத்தில் வாழ்கிறது!

அதனை அடி வணங்கி வால்மீகி வழி செல்வோம்!

ஸ்ரீமதே ராமானுஜாய நமஹா!